விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 04 திங்கட்கிழமை (20.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 275

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## நீர்வேலியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)
நீர்வேலிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, நீர்வேலிச் சந்திக்கு அருகில் 15

## கணவனை திருகுவளைக் கட்டையால் அடித்துக் கொலை செய்த மனைவி

### அரியாலை பூம்புகார் பகுதியில் கொடூரம்

- மனைவி உட்பட இருவர் கைது
- கூட்டுக்கொலை என பொலிஸார் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு முற்றியதால் கணவனை திருகுவளைக் கட்டையால் அடித்து மனைவி கொலை செய்துள்ளார்.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகார் பகுதியில் நேற்று முன்தினம் இடம் 15



## யாழ்.சிறைச்சாலையில் கொரோனாக் கொத்தணி

**39** பேருக்கு பிசிஆர்

**34** பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் புதிய கொரோனாக் கொத்தணி உருவாகி 15

### வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்ற நேரங்களில்

# மக்களின் செயற்பாடுகள் மிக மோசமாகவுள்ளது

### சுகாதாரப் பணிப்பாளர் அசேல குணவர்த்தன அதிருப்தி



*(கொழும்பு)*
**வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்ற நேரங்களில் மக்களின் செயற்பாடுகள் மோசமாக அமைந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்த்தன அதிருப்தி வெளியிட்டுள்ளார்.**

நாட்டின் கோவிட் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டு நிலைமைகள் குறித்தும் தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டம் குறித்தும் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

இந்தக் கட்டுப்பாட்டு நிலைமைக்கு இரண்டு பிரதான காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளன. 15

## மன்னாரில் மாணவன் மரணம்

### நால்வர் கைது

(மன்னார்)
மன்னார் கள்ளியடிப் பகுதியில் வசிக்கும் வவுனியாவைச் சேர்ந்த நாகேந்திரன் டிலக் 15

## கொரோனாவால் 103 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் மேலும் 103 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.
இலங்கையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 12,125 ஆக அதிகரித் 15

## நாட்டில் மேலும் 1,733 பேருக்கு கொரோனா

(கொழும்பு)
கொரோனாத்தொற்று 15

## வட்டுக்கோட்டையில் ஒருவர் மீது வாள்வெட்டு

### இருவர் பொலிஸாரால் கைது

(அராலி)
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முதலியார் கோவில் பகுதியில் நேற்றைய தினம் வன்முறைக் குழு ஒன்று தாக்குதல் 15

## யாழில் இரு இடங்களில் பிறந்தநாள் கொண்டாட்டம்

### 35 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட சுமார் 35 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
திருநெல்வேலி பகுதியிலுள்ள விருந்தினர் விடுதியிலும் ஒட்டுமடத்தி 15

## மதுசாலையை மீளத் திறப்பது தற்போது பொருத்தமற்றது

### இராஜாங்க அமைச்சர் ஜயசுமண

(கொழும்பு)
இந்த நேரத்தில் மதுபான சாலைகளைத் திறப்பது சரியான நடவடிக்கை அல்ல என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண 15

### யாழில் 56 பேர் உட்பட

## வடக்கில் 80 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் ஒரு வயதுப் பெண் குழந்தைகள் 15

## கோவிட் பலி

யாழ். 02
கிளி. 01

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரி ஆதார 15

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 18 – 06 – 1966

ஆண்டவன் அடியில் 18 – 09 – 2021

## சதாசிவம் வேல்மாறன்

இலங்கை மண்ணின் புகழ்பூத்த மிருதங்க, தபேலா கலைஞரும் பல மிருதங்க மாணவர்களின் மதிப்பிற்குரிய ஆசானுமாகிய சதா. வேல்மாறன் நேற்று முன்தினம் (18.09.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் புகழ்பூத்த முன்னைநாள் வில்லிசைக் கலைஞர் வேலணை சபா.சதாசிவம் - பேபி தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - அன்னலெட்சுமி தம்பதியரின் அருமை மருகரும் கமலினியின் அன்புக் கணவரும் சாருமதி, சாரங்கி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறிரஞ்சனி, காலஞ்சென்ற மணிமாறன், திருமாறன் ஆகியோரின் சகோதரனும் நிமலன், கேதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 82/4, கஸ்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

076 271 0104
077 917 3947

தகவல்:- குடும்பத்தினர்

# மூளாயில் தனிமைப்படுத்தலிலுள்ள வீட்டுக்குள் புகுந்து கும்பல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தனிமைப்படுத்தலில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை மூளாய் தெற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 5 பேர் கொண்ட வன்முறைக் கும்பல், பெண்கள் மட்டும் உள்ள குறித்த வீட்டுக்குள் புகுந்து வீட்டுக் கதவு, யன்னல் மற்றும் ரீ.வி, கதிரைகள் என்பவற்றை அடித்து சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.



இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஞா)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 09.04.1958

இறப்பு 17.09.2021

எமது பிரதேச செயலகத்தில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி நிஷாந்தினி சசிகுமார்
அவர்களின் பாசமிகு தந்தையார்
அமரர்
**சின்னையா கணபதிப்பிள்ளை**
அவர்கள் கடந்த 17.09.2021 அன்று காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயருடன்...

பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கடந்த 21.08.2021 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் தியாகேசு ஜீவச்சந்திரன்

(பாங்கன்)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.09.2021) திங்கட்கிழமை காலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னார் இறைபதமடைந்த துயரச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டில் நிலவும் கோவிட் - 19 அசாதாரண சூழ்நிலையின் பொருட்டு அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக அனைவரையும் இந் நிகழ்விற்கு அழைக்க முடியவில்லை என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C-2674)

குஞ்சர் கடையடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்

மண்ணில் 08.04.1952

விண்ணில் 21.08.2021

# சர்வதேசத்திற்கு இரட்டை முகம் காட்டும் கோட்டாவின் ஆட்சியை மாற்ற வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்



(கொழும்பு)

**சர்வதேச சமூகத்திற்கு இருமுகத்தினை காண்பிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியை மாற்ற வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

தற்போதைய ஜனநாயகத்திற்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்ட அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் நீடித்தால் ஒட்டுமொத்த சிறுபான்மையினருக்கும் பேராபத்து என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஊடகமொன்றிற்கான இணையவழியிலான நேர்காணல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது, இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் எந்தவொரு அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அவ்வாறு கொள்ளப்போவதும் இல்லை. கடந்த அரசாங்கத்தின் மீதும் அவ்வாறான நிலைப்பாட்டிலேயே இருந்தோம். ஆனால் அவர்கள் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக சொன்னார்கள். அதற்காக அவர்களுடன் இணைந்து முயற்சிகளை எடுத்தோம். அது சாத்தியமாகவில்லை. அவ்வாறிருக்கையில், தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கமானது சர்வதேசத்திற்கு இரட்டை முகத்தினைக் காண்பிக்கின்றது.

மீண்டும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை உயர்ஸ்தானிகரின் அறிக்கையை நிராகரிப்பதாக அரசாங்கம் அறிவிக்கின்றது.

உண்மையிலேயே அரசாங்கம் தனக்குள்ள இரண்டு முகங்களில் எதனைக் காண்பிப்பது என்பது தொடர்பில் தெரியாது நிற்கின்றது. ஆகவே அரசாங்கம் தனது போக்கினை மாற்ற வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் நாட்டிற்கு மோசமான பின்விளைவு காத்திருக்கும்.

இதேவேளை, எதிரணிகளின் அரசுக்கு எதிரான ஒன்றிணைவின்போது இனப்பிரச்சினை விடயத்தினையும் உள்ளீர்க்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். கடந்த தடவையும் அந்த விடயம் உள்ளீர்க்கப்பட்டது. அந்த வகையில் இம்முறையும் அவ்விதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது நாம் எமது விடயங்களையும் முன்னிலைப்படுத்துவோம்.

எவ்வாறாயினும் தற்போது காணப்படுகின்ற கொடூரமான ஆட்சியை தொடர இடமளிக்க முடியாது. அவ்வாறு இடமளிக்க விடுவதானது சிறுபான்மை தேசிய இனங்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு பேராபத்தானது.

விசேடமாக இந்த ஆட்சிக் காலத்தில் நில அபகரிப்புக்கள் அதிகமாகியுள்ளன. இந்நிலைமை தொடர்ந்தால் தீர்வு பற்றி பேசுகின்ற போது நாம் நிலமற்றவர்களாகிவிடுவோம். அதற்கு பின்னர் தீர்வினைப் பெற்றுக்கொள்வதில் பயனில்லை. ஆகவே அவ்விதமான ஆக்கிரமிப்பு, அடக்குமுறை ஆட்சியை மாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# 20 வயதிற்கு மேற்பட்டோருக்கு நாளை தடுப்பூசி வழங்கல்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கொவிட்-19 தடுப்பூசி மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் 20 தொடக்கம் 30 வயதிற்கு உட்பட்ட அனைவருக்கும், நாளை செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்பட உள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.



இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் பற்றிய விவரங்கள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரியினால் வெளியிடப்படும்.

அவ்வாறு அறிவிக்கப்படும் தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான முதலாவது, இரண்டாவது தடவைக்கான தடுப்பூசிகளும் வழங்கப்படும்.

20 தொடக்கம் 30 வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் தமது அடையாள அட்டை போன்ற உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்து தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையிலும், தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனைகளிலும் செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி மற்றும் ஒக்டோபர் மாதம் 2ஆம் ஆம் திகதி சனிக்கிழமைகளில் காலை 8.00 மணி முதல் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசிவழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தமது பிரதேசத்திற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட மருத்துவமனைகளில் ஏதாவது ஒன்றில் தமக்குரிய தடுப்பூசியினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பணிப்பாளர் தெரிவித்தார். (நி-5-18-33)

# அரசியல் கைதிகள் மீதான வழக்கு விரைவாக விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும்

## ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் மற்றும் அவர்கள் மீதான வழக்குகள் குறித்து ஆராய்ந்து பார்க்க ஆலோசனை குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகுமென்றும் இந்த வழக்குகளை விரைவாக விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லட் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 16 பேரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பை வழங்கி விடுதலை செய்தமை வரவேற்கத்தக்க விடயமாகும்

இலங்கை ஜனாதிபதியும் அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து பொறுப்புடனும் ஒத்துழைப்புடனும் கடமையாற்றுவதையும் தான் வரவேற்பதாக தெரிவித்தார் அத்துடன் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இழப்பீட்டை வழங்கும் தேசிய கொள்கையை நிறைவேற்றியுள்ளமை மற்றும் புனர்வாழ்வு செயற்பாடுகளை தொடர்ச்சியாக கொண்டு செல்கின்றமையும் வரவேற்கத்தக்கதென்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிக்சேல் பச்லட் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# சந்தையில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

அடுத்துவரும் இரண்டு வாரங்களுக்குள் சீனி இறக்குமதிக்கு அனுமதிஅளிக்காவிட்டால் சந்தையில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இருக்கின்றது என அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் கடந்த வருடம் இறுதிப் பகுதியில் சீனிக்கான இறக்குமதி வரியை 25 சதம் வரை குறைத்துவிட்டு தேவைக்கும் அதிகமானளவு சீனி நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

அதன் பின்னர் சீனி இறக்குமதி செய்வதை அரசாங்கம் தடைசெய்திருந்தது. அதன் பிரகாரம் தற்போது நாட்டில் கையிருப்பில் இருக்கும் சீனி தொகை எதிர்வரும் ஒன்றரை மாதங்களுக்கே போதுமானது.

அத்துடன் நாட்டுக்கு ஒரு மாதத்துக்கான சீனி தேவைப்பாடு 45 ஆயிரம் மெற்றிக் தொன்னாகும். தற்போது கைவசம் இருப்பது சுமார் 75 ஆயிரம் மெற்றிக் தொன் வரையாகும்.

இவ்வாறான நிலையில் சீனி இறக்குமதிக்கு அனுமதி வழங்காவிட்டால் எதிர்காலத்தில் சீனிக்கு தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# மரண அறிவித்தல்

## திருமதி கணேசம்மா கந்தசாமி

**பிறப்பு : 22.10.1933**
**இறப்பு : 28.08.2021**



யாழ். நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசம்மா கந்தசாமி கடந்த 28.08.2021 (சனிக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் செல்லையா - பெரியபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற இராசதுரை, மகாதேவன், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி, சத்தியசீலன், காலஞ்சென்ற செல்வம் (ஜேர்மன்), ஜெயராசா, ராதா, காலஞ்சென்ற அம்பிகாவதி (ஜேர்மன்), மஞ்சுளா, மகிந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் நடராசா, இராசம்மா, வவா (ஜேர்மன்), காலஞ்சென்ற பூமா, சந்திரமலர் (செல்வி), சற்குணதேவி (சலா), மரிற்றா (ஜேர்மன்), தயாபரன், ஜெயறஜனி (வவா) ஆகியோரின் பாசமிகு மாமியும் நிமலேஸ் (கனடா), றகுலேஸ், கமலேஸ் (பிரான்ஸ்), கபிலேஸ், டக்கிளேஸ், நிஷாந்தன், உஷாந்தன் (பிரான்ஸ்), றொஷாந்தன், அகிலன், நிமல், அனிதன், வினோத், நிதர்சன் (ஜேர்மன்), டனிக்ஷன், கிந்துசன், டபின்சன், வர்ஷன், டிதுரசனன், ஸதுரசனன், சாருஜன், லருஜன், சஞ்சஜன், நிமலினி (ஜேர்மன்), றகுலினி (ஜேர்மன்), பிரியா, ஜிமித்தா, பவித்தா, தர்சினி, தனுஷியா, தர்மியா, லிதுனா, தர்மிகா, பானுஷா, கார்த்திகா (லண்டன்), தமிழினி, டிசாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிஷேக், அகாசி, ஸ்ரீபன், அஸ்வின், ஆர்திஸ், லிகாஸ், அகிஸ், நிறூஸ், மிதுன், கெவின், தருன், சஞ்சஜ், அஜய், சகிந், ஆதவன், ஷர்வின், நிஸர்னா, நிபிசா, துசானி, டொறிஷா, ஜெசியா, சபீனா, சன்சிகா, அபிநயா, அக்ஷயா, மினுஸ்கா, லிபிஸ்கா, பிரஜீனா, தனிஷா, மெடுனா, டிவின்ஸ்சிகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 28.08.2021 (சனிக்கிழமை) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நவாலி கொத்துக்கட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(7939)

**கலையரசு வீதி,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

# இராசிபலன்

20.09.2021
புரட்டாதி 04 , திங்கட்கிழமை
சதுர்த்தி காலை 6.06 மணிவரை
பூரணை பின்னிரவு 6.02 மணிவரை
புரட்டாதி பின்னிரவு 5.24 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
சந்திராஷ்டமம்: ஆயில்யம்
பூரணை விரதம்

வளவன்


மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய புதிய திட்டங்கள் திட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் பெண்ணான செய்தியொன்று வந்து சேரலாம், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.


மிதுனம்

கோரிக்கைகள் நிறைவேற கோவிலுக்குச் செல்ல வேண்டிய நாள், மனித தெய்வ வழிபாடு மகத்துவம் தரும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர்.


கடகம்

வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், மகிழ்ச்சி குறையாது இருக்க மற்றவரை அனுசரித்து செல்வது நல்லது, பயணங்களால் பொது விழிப்புணர்வு அவசியம்.


சிம்மம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, சொந்த பந்த ஒத்துழைப்பால் சிந்தை மகிழ்வீர்கள், மனதில் நினைத்த திட்டங்களை நிறைவேற்றுவீர்கள்.


கன்னி

எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.


துலாம்

பிள்ளைகளின் நலனில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள்.


தனுசு

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு.


மகரம்

சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு.


கும்பம்

மறக்க முடியாத, இனிய சம்பவமொன்று நடைபெறலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், உறவினர்கள் சந்திப்பால் திடீர் செலவுகள் ஏற்படலாம்.


மீனம்

செய்தொழிலில் சிறு மாற்றங்கள் செய்ய முற்படுவீர்கள், தூரதேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

**அமைதியிலே உனது அறிவு புதிய வேர்களை விடும்**

# இலங்கை குறித்த ஐ.நாவின் பொறிமுறையை ஏற்க முடியாது

## அரசாங்கம் மீண்டும் உறுதி

**(கொழும்பு)**

**இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் நிறுவ முயற்சிக்கின்ற தற்காலிகமான பொறிமுறையை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

இந்தப் பொறிமுறை ஐ.நா. சாசனத்தின் உயிரோட்டம் மற்றும் ஆவணங்களுக்கு ஏற்ப அமையவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜிஎல். பீரிஸ் தெரிவித்தார்.

உள்ளூர் நிறுவனங்கள் தமது ஆணைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான அமைப்புக்கள் தேவைப்படுகின்றன.

இந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பணிகளை வெளிப்புற அமைப்புக்களால் மாற்றவோ அல்லது கையகப்படுத்தவோ முடியாது எனவும் பீரிஸ் தெரிவித்தார்.

பொதுநலவாய பொதுச் செயலாளர் பட்ரிசியா ஸ்கொட்லாண்ட்டுடன் நியூயோர்க்கில் இடம்பெற்ற மெய்நிகர் சந்திப்பொன்றில் அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளுடனான பேச்சுவார்த்தை மற்றும் ஈடுபாட்டிற்கான இலங்கையின் செயலுறுதிப்பாட்டை இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மீண்டும் உறுதிப்படுத்தினார் என வெளிவிவகார அமைச்சு நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளது. (நி-5)

# 60 வயதிற்கு மேல் தடுப்பூசி செலுத்தாதோர் யாழில் அதிகம்

(கொழும்பு)

நாட்டில் 60 வயதுக்கு மேற்பட்ட ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர், இதுவரை கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கள உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தடுப்பூசியேற்றும் நடவடிக்கை தொடர்பாக பரவும் பொய்யான விடயங்கள் காரணமாக தடுப்பூசியை நிராகரிப்பதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதுவரை தடுப்பூசி பெறாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் அதிகளவானோர் யாழ். மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# தந்தையின் கண்ணைத் தோண்டி சிதைத்த போதைக்கு அடிமையான மகன்

## மட்டக்களப்பில் கொடூரம்

(மட்டக்களப்பு)

தந்தையின் கண் ஒன்றை தனது கைவிரல்களால்தோண்டி சிதைவடையச் செய்துள்ள சம்பவம் ஒன்று மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் பிரதேசத்தில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் 67 வயதுடைய தந்தையே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில்,

தந்தைக்கும் 19 வயதுடைய மகனுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தனது தந்தையை கடுமையான முறையில் தாக்கி தந்தையின் கண்ணை தோண்டி சிதைத்துள்ளார்.

இந்த கோர செயலுக்கு போதைப்பொருள் பாவனையே காரணம் என ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு கண் சிதைவடைந்து வெளியில் வந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

அவரது மகனை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5)

# சீனாவின் சேதன உரத்தில் ஆபத்தான பக்றீரியாக்கள்

## அஜித் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

சீனாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவிருந்த சேதன உரம் எனக்கூறப்படும் உரத்தின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது அதில் பாரிய ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய பாரதூரமான பக்றீரியாக்கள் உள்ளடங்கியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர்அலுவலகத்தில்நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த பக்றீரியாக்கள் பாரதூரமான நோய்களை ஏற்படுத்தக் கூடியவை என்பதோடு அவற்றால் ஏற்படக்கூடிய நோய்க்கு மருந்தும் கிடையாது.

இவ்வாறான 95 000 மெட்ரிக் தொன் உரம் இறக்குமதி செய்யப்படவிருந்ததோடு , இதற்காக 63 மில்லியன் டொலர் செலவிடப்படவிருந்தது என அவர் தெரிவித்தார். (நி-5)

# சுகாதாரத்துறை மீது அரசு அதிக அழுத்தம்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

(தருமபுரம்)

**நாட்டின் சுகாதாரத்துறையை சுதந்திரமாக செயற்படவிடாது அழுத்தத்தை பிரயோகிக்கிறது இந்த அரசாங்கம் இதனால் பல வைத்திய நிபுணர்கள் பதவியை துறக்கின்றனர் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில், நாடு முடக்கப்பட்டு மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பது ஒருபுறம் இருக்க மரணங்கள் குறைக்கப்பட்டிருப்பதாகவும் கொரோனாவின் தாக்கம் குறைந்துள்ளதாக அரசாங்கம் ஒரு புறம் சொன்னாலும் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட வைத்திய நிபுணர்கள் இந்த கொரோனா செயலணியிலிருந்து விலகிச்செல்கின்றனர்.

சுகாதார நடைமுறையில் உள்ள பிரச்சினை மற்றும் வைத்தியர்களை சுதந்திரமாக செயற்பட இடமளிக்காமையே காரணம் சுகாதாரத்துறையை



இராணுவமயப்படுத்தி இராணுவ செயலணிக்குள் சுகாதாரத்துறையை கொண்டுவந்ததன் காரணமாகவே சுகாதார துறையினர் கூடமையிலிருந்து விலகிச்செல்கின்றனர்.

உலகத்தில் எந்த நாட்டிலும் ஒரு உயர்நிலையிலுள்ள அரசியல்வாதி பதவி விலகி அரச தொழிலுக்கு குறிப்பாக நிதிக்க சென்றதாகவேவரலாறுஇல்லை. ஆனால் இங்கு தலைகீழாக நடக்கிறது. ஒருவர் அமைச்சர் பதவியை துறந்து மத்திய வங்கி ஆளுநராகின்றார். மற்றையவர் பதவியைத்துறந்து தூதுவர் ஆகின்றார்.இப்படியான செயற்பாடுகளே நாட்டில் இடம்பெறுகிறது என்றால் இந்த நாட்டின் கஷ்ட நிலை, இராஜதந்திர நிலை,அரசியல் நிலை கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களை நம்பி வாக்களித்த சிங்கள மக்களே அன்றாட உணவுக்கு கையேந்தும் நிலையில் உள்ளனர். செயற்கைப் பசளை இறக்குமதி செய்து மானியமாக வழங்கி வந்த நிலையில் அதை கூட உடனடியாக நிறுத்தி சீனாவிலிருந்து கிருமிகளோடு செயற்கைப் பசளையைப் போன்று சேதனப்பசளை என்று சொல்லிக் கிருமிகளோடு இறக்குமதி செய்கின்றனர் எனத் தெரிவித்தார். (4-7-316)

### நூல் நயப்புரை அரங்கும் வாழ்த்து நிகழ்வும்



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதனாவது பீடாதிபதியுமாகிய முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் எழுதிய உளக்குவிப்பும் கற்றலும் என்ற நூலின் நயப்புரை அரங்கும் 75 ஆவது அகவை வாழ்த்து நிகழ்வும் இன்று இரவு 7 மணிக்கு சூம் செயலி வாயிலாக இடம்பெறும்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பங்கேற்பதற்கான சூம் அடையாள எண் 584 790 8072. கடவுச்சொல் KTC ஆகும். (4-7-6)

## கரவெட்டியில்

# நடமாடும் சேவைமூலம் 1,362 பேருக்கு தடுப்பூசி

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் கடந்த 6 நாட்களாக சனச்செறிவான 12 பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்கு சுகாதார உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதன் போது 30 வயதிற்கு மேற்பட்ட 7 ஆயிரத்து 149 பேர் இனங்காணப்பட்டதுடன் இவர்களில் தடுப்பூசி ஏற்றாதவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டதுடன் ஒலிபெருக்கி மூலமும் தொடர்ச்சியான அறிவிப்புகள் வழங்கப்பட்டன.

நடமாடும் சேவை மூலமாக ஆயிரத்து 362 பேருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டது. குறித்த சோதனை நடவடிக்கையில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 87.4 வீதமானவர்கள் ஆகக் குறைந்தது ஒரு தடுப்பூசியையாவது பெற்றுள்ளார்கள் என்பதுடன் 71 வீதமானவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளார்கள்.

12.6 வீதமானவர்கள் எந்தவொரு தடுப்பூசியினையும் பெற்றுக் கொள்ளவில்லை என கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரிதெரிவித்தார்.(4-7-60)

## அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் 02 நிகழ்வு இம்மாதம் 20, 21, 22,23 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரிதமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261. கடவுச்சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (4-7-6)

## ஈழத்தின் தபேலா கலைஞர் சதா.வேல்மாறன் காலமானார்

(குப்பிழான்)

ஈழத்தின் மூத்த தபேலா, மிருதங்க வாத்தியக் கலைஞர் சதா. வேல்மாறன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக குடும்பத்தார் தெரிவித்துள்ளனர்.

கொரோனா அறிகுறிகள் தென்பட்ட நிலையில் அவர் வைத்தியசாலைக்குச் சென்ற போதே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

விடுதலைப் போராட்டக் காலத்தில் ஒலிபரப்பாகிய கணிசமான பாடல்கள், பெருமளவான பக்திப்பாடல்களுடன்



ஆயிரக்கணக்கான அரங்க நிகழ்வுகளிலும் அவர் அணி இசை செய்துள்ளார்.

நூற்றுக்கணக்கான மாணவர்களையும் மிருதங்க, தபேலா கலைஞர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவராகவும் இவர் விளங்கியுள்ளார். (4-7-18)



**கொற்றாவத்தை உப்புக் கிணற்றடி அம்மன் ஆலய நிர்வாகத்தினரின் வேண்டுகோளுக்கமைய தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆச்சிரம மோகனதாஸ் சுவாமிகளால் ஆலயச் சூழலில் உள்ள தொழில் பாதிக்கப்பட்ட 125 குடும்பத்தினருக்கு நிவாரணப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (படம்: மகாலிங்கம்)**

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற கன்டர் ரக வாகனம் மடக்கிப்பிடிப்பு

## சாரதியும் கைது

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிசென்ற கன்டர் ரக வாகன சாரதியை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்து , அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அச்சுவேலி ஆவரங்கால் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்செல்வதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு நேற்று முன்தினம் இரவு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அப்பகுதியில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அதன் போது சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த கன்டர் ரக வாகனத்தை மடக்கிப் பிடித்து சாரதியை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சாரதியையும் கைப்பற்றப்பட்ட கன்டர் வாகனத்தையும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்தனர். (4-7-33)



**மணற்காடு கிராமத்தில் வாழும் கொவிட் நோயினால் பாதிக்கப்பட்ட 70 குடும்பத்திற்கு ஆயிரத்து 340 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் கனடாவில் வாழும் குலசேகரம் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் பூமணியம்மா அறக்கட்டளையினரால் கடந்த 14 ஆம் திகதி வழங்கப்பட்டது.**

# ஐ.நாவில் இலங்கைக்கு ஆதரவாக பல நாடுகள் திரளும்

## இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அலுவலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை பேரவையில் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கான வாக்களிப்பின் போது இம்முறை பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஆரம்பமாகியுள்ள ஐ.நா மனித உரிமைப் பேரவை அமர்வில் வாய்மூல அறிக்கையை முன்வைத்த மனித உரிமைப்பேரவையின் ஆணையாளர் இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பில் பல விடயங்களை முன்வைத்தார்.

அதன் மீதான விவாதத்தில் கலந்து கொண்டுள்ள பல்வேறு நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக ஜெனிவாவில் உள்ள இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிஅலுவலகம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க இம்முறை அமர்வில் உரையாற்றிய ஜப்பானின் வதிவிட பிரதிநிதி,

இலங்கைக்கு தேசிய நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை போன்ற விடயங்களை மேம்படுத்த சந்தர்ப்பம் உள்ளதாகவும் அரசாங்கம் விசாரணை ஆணைக்குழு மூலம் விசாரணை உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அது தொடர்பில் இலங்கை தொடர்ந்தும் சுயாதீனமாக செயற்படுவது முக்கியம் எனவும் அந்த முயற்சிக்கு சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஜெனிவாவிலுள்ள இந்தியாவுக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி அது தொடர்பில் தெரிவிக்கையில்,

நாடுகளுக்கிடையிலான விவாதங்கள், பேச்சுவார்த்தைகள், தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலமும் மனித உரிமையை மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பதை சிறப்பாக முன்னெடுக்க முடியும் என தாம் நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜெனிவா மனித உரிமை பேரவையின் கடந்த 46 ஆவது அமர்வின்போது இலங்கை மனித உரிமையை மீறிசெயற்படுவதாக ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி, மொண்டிநீக்ரோ, வட மசிடோனியா மற்றும் மலாவி ஆகிய நாடுகள் இணைந்து முன்வைத்துள்ள 46/1 யோசனை நிறைவேற்றப்பட்டிருந்தது.

11 நாடுகள் அதற்கு எதிராக வாக்களித்துள்ளதுடன் மேலும் 14 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. சில நாடுகள் நடுநிலை வகித்தன.

எனினும் தற்போது நடைபெறும் 48 ஆவது மனித உரிமை பேரவை அமர்வில் பல நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதற்கு முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)


# கண்ணீர் அஞ்சலி



## அமரர்.திரு.சுப்பிரமணியம் ஆனந்தராசா

வலம்புரி பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றிய
ஆ.சனக்குமாரன்
அவர்களின் அன்புத் தந்தை
திரு.சுப்பிரமணியம் ஆனந்தராசா
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றோம்.

(ஊ) **வலம்புரி குடும்பம்**


# பாடசாலைகளை மீளத் திறப்பதற்கான வழிகாட்டல்கள் அடுத்த சில வாரங்களில்

## கல்வி அமைச்சு



(கொழும்பு)

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான சுகாதார வழிகாட்டல்கள் கல்வி மற்றும் சுகாதார அதிகாரிகளினால் அடுத்த சில வாரங்களில் வெளியிடப்படும் என்று கல்வியமைச்சர் தினேஷ்குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீண்டும் திறப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்து கல்வி மற்றும் சுகாதார அமைச்சக அதிகாரிகள் இன்னும் கலந்துரை யாடி வருகின்றனர். பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான ஒரு திகதியை இன்னும் தீர்மானிக்கவில்லை.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, உயர்தரப் பரீட்சை மற்றும் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட சாதாரண தரப் பரீட்சை நடைமுறைத் தேர்வுகளை நடத்துவதற்கு தேவையான திட்டங்களையும் கல்வி அமைச்சு பரிசீலித்து வருகின்றது.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி போடும் செயற்திட்டத்தை துரிதப்படுத்துவதற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேலும் குறிப்பிட்டார். (நி-5)

# ஊரடங்குச் சட்டத்தை மீறினால் சட்ட நடவடிக்கை- நிஹால் தல்துவ

(கொழும்பு)

சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றாது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (நி-5)


# மரண அறிவித்தல்

## திருமதி இரஞ்சினி சற்குணானந்தம்



தோற்றம் 21.06.1955
மறைவு 15.09.2021

ஆசிரியர்வீதி, பெரிய அரசடி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரஞ்சினி சற்குணானந்தம் அவர்கள் 15-09-2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சற்குணானந்தம் அவர்களின் (இளைப்பாறிய உப தபாலதிபர் - நல்லூர் கோயில் உப தபால் அலுவலகம்) அன்பு மனைவியும் திருவரங்கனின் அன்புத் தாயாரும் அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர் - சாவகச்சேரி கனிஷ்ட இந்துக் கல்லூரி) சின்னம்மா (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி கனகரட்ணம் மகாலட்சுமியின் அன்பு மருமகளும் இராதா, இரவீந்திரன், இரஞ்சன், இரவிச்சந்திரன், இரதிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சரவணபவன், பரிமளா (கலா), ரோகிணி, ராதா, ஜெயேந்திரன், உமாசுந்தர், காலஞ்சென்ற கிருஸ்ணானந்தம், லோகானந்தம், லோகராணி, கலைவாணி, குமுதினி, குகானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற தில்லைநாதன் அவர்களின் பேரமகளும் திரு.திருமதி திலைநாயகம் அன்னலட்சுமி அவர்களின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.09.2021 இன்று திங்கட்கிழமை சுகாதார விதிமுறைகளுக்கமைவாக கோம்பயன்மணல் இந்து மயானத்தில் மாலை 6.00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சற்குணானந்தம் (பாலா)
திருவரங்கன்

46/1, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(7924) 077 9966808/ 0212219723

## ஆக்கஸ் ஒப்பந்தம்

# அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து தூதுவர்களை திருப்பி அழைத்த பிரான்ஸ்

(பாரிஸ்)

**அவுஸ்திரேலியா-பிரிட்டன்-அமெரிக்கா அமைத்துள்ள புதிய கூட்டணிக்கு (ஆக்கஸ்) எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கான தங்கள் நாட்டுத்தூதுவர்களை பிரான்ஸ் திரும்ப அழைத்துள்ளது.**

அமெரிக்காவின் மிகப் பழைய கூட்டாளியான பிரான்ஸ், அந்த நாட்டிலிருந்து தங்களது தூதரைத் திரும்ப அழைப்பது இதுவே முதல் முறையாகும்.

இது குறித்து பிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜியான்-ஈவ் லெடிரையான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புதிய கூட்டணி அறிவிப்பின் ஒரு பகுதியாக, பிரான்ஸிடமிருந்து பாரம்பரிய நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கும் தனது முடிவை அவுஸ்திரேலியா மாற்றிக் கொண்டுள்ளது.

அதற்குப் பதிலாக, அணுசக்தியில் இயங்கும் அமெரிக்க நீர்முழ்கிக் கப்பல்களை வாங்கப் போவதாக அறிவித்துள்ளது.

இதுபோன்ற புறக்கணிப்பை கூட்டணி நாடுகள் மேற்கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாத தவறாகும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், தங்களது நலன்களைப் பாதுகாக்கவும், அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலை அவுஸ்திரேலியா பெற உதவுவதற்கும் இந்தக் கூட்டணி தொடங்கப்பட்டுள்ளதாககள் அந்த நாடுகள் அறிவித்துள்ளன.

கனிம வளங்கள் நிறைந்த தென்சீனக் கடல் பகுதி முழுவதற்கும் சீனா உரிமை கொண்டாடி வருகிறது. சர்வதேச கடல் வர்த்தகத்தின் முக்கிய பாதையாகத் திகழும் இந்தப் பகுதியை சர்வதேச நாடுகள் தங்களது வழித்தடமாகப் பயன்படுத்தும் உரிமையை அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தென் சீனக் கடல் வழியாக தங்களது போர்க் கப்பல்களை அமெரிக்கா அனுப்பி வருகிறது.இதனால், இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் நிலவி வருகிறது.

இந்தச் சூழலில், இந்தோ-பசிபிக் பிராந்தியத்துக்காக புதிய பாதுகாப்புக் கூட்டணியை அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்து உருவாக்கியுள்ளன.

இந்தக் கூட்டணியின் ஒரு பகுதியாக, அவுஸ்திரேலியாவுக்கு அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை வழங்குகிறது. பிரான்ஸிடமிருந்து நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கும் திட்டத்தை அவுஸ்திரேலியா கைவிட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து தங்களது தூதுவர்களை பிரான்ஸ் திரும்ப அழைத்துள்ளது. (7-4)

## ஒரு நாளைக்கு 30 நிமிடங்கள் உறங்கும் இளைஞர்



(டோக்கியோ)

ஜப்பானைச் சேர்ந்த தைசுகே ஹோரி, என்பவர் (வயது 36) "ஜப்பான் ஷார்ட் ஸ்லீப்பர் அசோஸியேஷன்" இன் தலைவராக பதவி வகிக்கிறார். கடந்த 12 ஆண்டுகளாக ஒரு நாளைக்கு 30 நிமிடங்கள் மட்டுமே இவர் உறங்குகிறார். இதனால் மிகவும் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருப்பதாக ஹோரி கூறுகிறார்.

தூங்கும் நேரத்தை எப்படி குறைப்பது என்பது குறித்து நூற்றுக்கணக்கானோருக்கு பயிற்சி அளித்தும் வருகிறார். இதுகுறித்து தைசுகே ஹோரி கூறியதாவது,

எல்லாரையும் போல நானும் எட்டு மணி நேரம் தான் தூங்கிக் கொண்டு இருந்தேன். ஆனால் பல வேலைகள் பாதித்தன.

எனவே தூங்கும் நேரத்தை குறைக்கதொடங்கினேன். கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து 12 ஆண்டுகளாக ஒரு நாளைக்கு 30 நிமிடங்கள் மட்டுமே தூங்குகிறேன்.

சில நாட்களில் அரை மணி நேரத்துக்கும் குறைவாகக்கூட தூங்குகிறேன். இதனால் உடல் ரீதியாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றார். (7-4)

## அடுத்தடுத்து குண்டு வெடிப்புக்கள் 5 பேர் பலி; 21 பேர் காயம்

(காபுல்)

ஆப்கானிஸ்தானின் காபுல் நகரில் பிடி.13 பகுதியில் சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று நேற்று முன்தினம் வெடித்து உள்ளது. இந்த சம்பவத்தில் 2 பேர் காயமடைந்து உள்ளனர்.

இதேபோன்று நங்கர்ஹார் மாகாணத்தின் ஜலாலாபாத் நகரில் தலிபான்களை இலக்காக கொண்டு அடுத்தடுத்து குண்டு வெடிப்புகள் நடந்து உள்ளன. இந்த தாக்குதல்களில் 3 பேர் பலியாகி உள்ளனர்.

21 பேர் காயம் அடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 2 பேர் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்து உள்ளனர். மொத்த உயிரிழப்புகளில் 3 பேர் பொதுமக்கள் ஆவர். மற்றவர்கள் இருவர் தலிபான் போராளிகள் என அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

அந்நாட்டில் தலிபான்கள் பொறுப்பேற்ற பின்பு நங்கர்ஹார் மாகாணத்தில் நடந்த முதல் குண்டு வெடிப்பு இதுவாகும்.

இதற்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. (7-4)

## டிரம்பின் மாற்றத்தை ரத்து செய்த நீதிமன்றம்



(வோஷிங்டன்)

இந்தியா உட்பட பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் குடியுரிமை பெறாமல், தங்கிப் பணிபுரிவதற்கு அந்த நாடு எச்-1பி விசா வழங்கி வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் 65 ஆயிரம் பேருக்கு இந்த விசா வழங்கப்படுகிறது. மேலும் அந்த நாட்டில் உயர்படிப்பு படித்த வெளிநாட்டினர் 20 ஆயிரம் பேருக்கும் இந்த விசா தரப்படுகிறது. ஆனால் அமெரிக்காவில் டிரம்ப் ஜனாதிபதியாக இருந்த போது, அமெரிக்க பொருட்களையே வாங்குவோம், அமெரிக்கர்களுக்கே வேலைவாய்ப்பு என்று தெரிவித்தார்.

மேலும், ஊதியத்தின் அடிப்படையில்தான் எச்-1பி விசா என புதிய விதியைக் கொண்டு வந்தார். அதிக சம்பளம் வாங்குவோருக்குத்தான் அமெரிக்க விசா வழங்கப்படும் என்பதால், இது வெளிநாட்டினர் அமெரிக்காவில் வேலை வாய்ப்பு பெறுவதில் தடைக்கல்லாக அமைந்தது.

இதை எதிர்த்து கலிபோர்னியா வடக்கு மாவட்ட நீதிமன்றில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜெப்ரே ஒயிட், டிரம்ப் கொண்டு வந்த மாற்றத்தை ரத்து செய்து அதிரடியாக தீர்ப்பு அளித்தார். (7-4)

## கர்ப்பத்தின் அனைத்து நிலைகளிலும் தடுப்பூசி பாதுகாப்பானது

### வேல்ஸின் தலைமை மருத்துவ அதிகாரி

(வேல்ஸ்)

கர்ப்பத்தின் அனைத்து நிலைகளிலும் தடுப்பூசி பாதுகாப்பானது மற்றும் பயனுள்ளது என வேல்ஸின் தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் ஃப்ராங்க் அதெர்டன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கொவிட் காரணமாக கடுமையான நோயுடன் கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும்

கர்ப்பிணிப் பெண்களிடம் மற்ற மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது கடுமையான நோய் அபாயத்தை அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.

'கொவிட்-19 தடுப்பூசி தாய்மார்களையும் குழந்தைகளையும் பாதிப்பில் இருந்து பாதுகாக்கும்.

கர்ப்பத்தின் அனைத்து நிலைகளிலும் தடுப்பூசி பாதுகாப்பானது மற்றும் பயனுள்ளது எனத்தெரிவித்தார். (7-4)

# உடலை சீரழிக்காது தகனத்தையாவது உரிய காலத்தில் செய்ய உதவுங்கள்

## கொவிட்டால் மரணித்தவர்களின் உறவுகள்

(குருமன்காடு)

**இறந்த துயரைக் காட்டிலும் சடலத்தை வைத்து இழுத்தடிப்பதால் வரும் துயரத்தை தாங்க முடியவில்லை. எனவே, உரிய அதிகாரிகள் இறந்தவர்களின் உடல்களை விரைவாக தகனம் செய்வதற்கு உதவ வேண்டும் என கொவிட்டால் மரணமடைந்தவர்களின் உறவினர்கள் கோரியுள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் வவுனியாவில் கோவிட் தொற்று காரணமாக மரணித்த 20 வரையிலான சடலங்கள் இது வரை தகனம் செய்யப்படாத நிலையில் வவுனியா வைத்தியசாலையில் உள்ளன. சில சடலங்கள் கடந்த 8 நாட்களாக தகனம் செய்யப்படாத நிலையில் உள்ளன.

தகனம் செய்து, அஸ்தியைப் பெற்று ஆத்ம சாந்திகிரியைகள் மூலமே மரணித்த உறவுகளின் சோகத்தை ஆற்ற முடிகின்றது. அதனைக் கூட செய்ய முடியாது பல நாட்களாக இறந்தவரின் உடல்களை தகனம் செய்யாது, இறந்தபின் கூட உடலை நீண்ட நாள் வைத்து உருக்குலைக்காதீர்கள். இது அவர்கள் இறந்த பின் கூட நிம்மதியாக தகனம் செய்ய முடியவில்லையே என்ற வேதனையைத் தருகின்றது.

இதேவேளை, வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள மின் மயானம் கடந்த சில நாட்களாக பழுதடைந்து காணப்பட்டமையால் சடலங்கள் தேக்கமடைந்திருந்ததாகவும், தற்போது மீண்டும் இயங்குகின்ற போதும் நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக 6 சடலங்களையே குறித்த மின் மயானத்தில் தகனம் செய்ய முடிவதால் தாமத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் சடலங்களை எரிப்பதற்கான பெயர் விபரங்கள் கட்டணம் செலுத்தப்பட்ட அடிப்படையில் நகரசபையினால் தரப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (7-4-6-250)

# அரசியல் வியாபாரத்தை புறம்தள்ளி ஒற்றுமையாக குரல் கொடுங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க செயலாளர்

(நெளுக்குளம்)

நீதிக்காக ஏங்கும் தமிழ் மக்கள் விடயத்தில் அரசியல் வியாபாரத்தை புறந்தள்ளி நீதியை பெற்றுத்தாருங்கள் என வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் சி.ஜெனிற்றா தெரிவித்தார். வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், ஓம் எம்பி அலுவலகம் ஒரு கண் துடைப்பிற்காகவே உருவாக்கப்பட்டது. அது சர்வதேசத்தினை ஏமாற்றுவதற்காக அரசின் தந்திரோபாயத்தால் உருவாக்கப்பட்டது. அந்த அலுவலகத்தின் மீது எமக்கு நம்பிக்கையில்லை.

இனப்படுகொலையை செய்த இலங்கை அரசுக்கு மன்னிப்பு வழங்காமல் குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தி எம் உறவுகளுக்கு சர்வதேசநீதி கிடைப்பதற்கு இணை அனுசரணை நாடுகள் உதவிபுரிய வேண்டும்.

நாம்12 வருடமாக தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறோம். எனவே சர்வதேச நாடுகள் தங்களது நலனுக்காக இலங்கை அரசை பாதுகாக்காமல் மனிதாபிமான அடிப்படையில் எமது பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்வரவேண்டும். இந்த அமர்விலாவது எமது உறவுகளுக்கு நீதிகிடைப்பதற்கு வழிசமைக்க வேண்டும்.

இன்று தமிழ் அரசியல்வாதிகள் தங்களது கதிரைகளை பாதுகாப்பதற்காக தங்களுக்குள் பேரம் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அதனைத்தவிர்த்து மக்களின் விடுதலைக்காக அரசியல் வாதிகளும், பொதுமக்களும் ஒட்டுமொத்த குரலாக ஒலித்து ஒன்றாக செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (7-4-6-299)

# பேருந்து முச்சக்கரவண்டி மோதியதில் விபத்து

(முறிகண்டி)

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் முச்சக்கரவண்டி பலத்த சேதமடைந்துள்ளது. கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் A9 வீதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவிலிருந்து பயணித்த ஊழியர் சேவை பேருந்து முச்சக்கரவண்டியுடன் மோதியதில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (7-4-6-100-316)



வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் 65 ஆவது படைப்பிரிவின் சமூக நல திட்டத்திற்கமைய 653 ஆவது பிரிகேடின் 24 கஜபா படையணி சிப்பாய்களால் மன்னார் சின்னபண்டிவிரிச்சான் பகுதியிலுள்ள குறைந்த வருமானம் பெறும் வீடற்ற இரு குடும்பங்களுக்கான புதிய வீடுகளை நிர்மாணித்து கொடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (படம் : யதுபாஸ்கரன்)

# மறைத்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீட்பு

(தர்மபுரம்)

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சார்வெளி பகுதியில் 26/04/2021 அன்று வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டு போயுள்ளதாக பளை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை கைவிடப்பட்ட நிலையில் சோறன்பற்று பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிற்பதாக பொது மக்களால் பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸாரினால் பனை ஓலைகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது. குறித்த மோட்டார் சைக்கிள் உரிமையாளரிடம் ஒப்படைக்கவும் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டவரை கைது செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7-4-6-316)

# பயிர் நிலங்களை பகிர்ந்தளிக்க உரிய ஏற்பாடு செய்யுங்கள்

## காணி அற்ற விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட புத்துவெட்டுவான் வாணிமோட்டைக் குளம் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ள போதும் இதன் கீழான விவசாயக்காணிகள் இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை எனவும் அதனை விரைவாக பெற்றுத்தர நடவடிக்கைஎடுக்குமாறு பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது மீள்குடியேறி வசித்து வரும் 27இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தை மேற்கொள்வதற்கான சொந்தக் காணிகள் இன்றி வாழ்ந்து வருவதாகவும் இதனால் ஜீவனோபாயமான விவசாய செய்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் அதன் கீழான வயல் நிலங்கள் இதுவரை தமக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை எனவும் இதனை பெற்றுத்தர விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு காணிகள் இல்லாத விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை புத்துவெட்டுவான் கிராமத்தில் கைவிடப்பட்ட குளங்கள் விவசாய நிலங்களும் காணப்படுவதாகவும் இவ்வாறான குளங்களைப் புனரமைத்து அதன் கீழான வயல் காணிகளை பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் கிளிநொச்சி வன்னேரிக்குளத்தின் கீழ் வசிக்கும் 104 வரையான குடும்பங்களுக்கு விவசாய காணிகள் இல்லாத நிலையில் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளனர். மக்கள் தமக்கான வயல் காணிகளை பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை வன்னேரிக்குளத்தின் கீழ் 52 குடும்பங்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வரும் நிலையில் குளத்தில் வளரும் ஒரு வகை புல் காரணமாக மீன்பிடியும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (7-4-6- 315)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2021-17.10.2021

**ஜோதிடக் கலாமணி சிவஸ்ரீ சிங்காரம்**

## பொருளாதார பற்றாக்குறை அகலும்



**நாட்டுப்பற்று மிக்கவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளும் மிதுன இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் உச்சம் பெற்றும், வக்கிரம் பெற்றும் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பரிபூரண பார்வை அதன்மீது பதிகின்றது. உங்கள் இராசி அடிப்படையில் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான குரு, நீச்சம்பெற்று பார்ப்பது யோகம் தான். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய திருப்பங்கள் பலவற்றையும் சந்திக்கக்கூடும்.

**மகர குருவின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. இவர் தற்போது அஷ்டமத்தில் வக்கிரம் பெற்றும், நீச்சம் பெற்றும் சஞ்சரிப்பதால் புதிய முயற்சிகளில் வெற்றிகிடைக்கும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் கைகூடி வரும். தொழில் மாற்ற சிந்தனை மேலோங்கலாம். புதியவர்கள் தொழில் பங்குதாரர்களாக சேர முன்வருவர். சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். வெளிநாட்டு வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அதுவும் கைகூடும்.

**மகரச் சனியின் வக்கிர நிவர்த்திக்காலம்**

மாதத் தொடக்கத்தில், உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சனி வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். அவரோடு குருவும் இணைந்திருப்பதால் கடுமையான பாதிப்பு ஏற்படாது. புரட்டாதி 11 ஆம் திகதி சனி வக்கிர நிவர்த்தியாகிறார். எனவே அவரது பலம் கொஞ்சம் கூடுகின்றது. அஷ்டமத்துச் சனி வலிமையடைவதால், எதையும் யோசித்து செய்வது நல்லது. அதேநேரம் அஷ்டமாதிபதி அஷ்டமத்தில் வலுப்பெறுவதால் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜ யோகம்' என்பதற்கேற்ப எதிர்பாராத நல்ல திருப்பங்களையும் சந்திப்பீர்கள். தொழில் ரீதியாக எடுத்த சில முயற்சிகள் கைகூடும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு.

**புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் புதன் உச்சம்பெற்றும், வக்கிரம் பெற்றும் இருக்கிறார். புரட்டாதி 17 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். இராசி நாதனாகவும், சுக ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன் வக்கிர




நிவர்த்தியாகும் வேளையில் நற்பலன்கள் கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றியாகும். ஒரு சிலருக்கு வீடு, இடம் வாங்கும் யோகம் வாய்க்கும். கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது அல்லது வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சியில் ஆர்வம் ஏற்படும். அதற்கேற்ப பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கலாம்.

**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**

புரட்டாதி 17 ஆம் திகதி, விருச்சிக இராசிக்கு சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், 6 ஆம் இடத்திற்கு வரும் போது நல்ல மாற்றங்களைக் கொடுக்கலாம். குறிப்பாக பிள்ளைகளின் திருமண காரியங்கள் கைகூடும். அவர்களின் உத்தியோகம் சம்பந்தமான முயற்சிகளும் வெற்றியாகும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப் புகள் வரலாம். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வழக்குகள் சாதகமாக முடியும்.

இம்மாதம் சனிக்கிழமைதோறும் அனுமனை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பணப்புழக்கம் அதிகரிக்கும். மனக்கசப்புகள் மாறும். கணவன் - மனைவிகள் இருந்த விரிசல்கள் அகலும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயல்பட்டு மகிழ்ச்சி காண்பர். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி பலன் தரும். உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த இலாகா மாற்றங்கள் கிடைக்கும். அம்பிகை வழிபாடு இன்பம் வழங்கும்.

## தடைப்பட்ட காரியங்கள் இனி தானாக நடைபெறும்



**துணிவும், பணிவும் கொண்டு செயலாற்றி வெற்றிபெறும் கடக இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியை குரு பகவான் பார்க்கிறார். அவர் நீச்சம் பெற்று பார்த்தாலும், அவரது பார்வைக்கு பலன் உண்டு. எனவே தடைப்பட்டு வந்த காரியங்கள் இனி தானாக நடைபெறும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.

**மகர குருவின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் நீச்சம்பெறுவதால், எதிர்பாராத நல்ல திருப்பங்கள் பலவற்றையும் சந்திக்கப் போகிறீர்கள். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வரலாம். மதிப்பு, மரியாதை உயரும். குரு பார்வை இருப்பதால் அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு, நல்ல காரியங்கள் பலவும் செய்ய முன்வருவீர்கள். இடம், புதிய வாகனம் வாங்கும் அமைப்பு உள்ளது. வெளிநாட்டில் இருந்து ஆதாயம் தரும் தகவல் வந்துசேரும். நண்பர்களால் தொழில் வளம் பெருகும்.

**மகரச் சனியின் வக்கிர நிவர்த்திக் காலம்**

மாதத் தொடக்கத்தில் சனி பகவான், உங்கள் இராசிக்கு 7இல் கண்டகச் சனியாக வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். புரட்டாசி 11 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிறார். 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அஷ்டமாதிபதி பலம் பெறும்போது, திடீரென இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம் நடைபெறலாம். வரும் மாற்றங்கள் உங்கள் வளர்ச்சிக்கு வித்திடுவதாக அமையும். களத்திர ஸ்தானாதிபதியாகவும் சனி விளங்குவதால், அது வலுப்பெறும் இந்த நேரத்தில் வாழ்க்கைத் துணையோடு அனுசரித்துச்செல்வது நல்லது. அவர்கள் உத்தியோகத்தில் இருப்பவர்களாக இருந்தால் மாறுதல்கள் வரலாம். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும். வரவை விட செலவு கூடும்.

**புதனின் வக்கிர நிவர்த்திக்காலம்**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், சகாய ஸ்தானத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். புரட்டாதி




17 ஆம் திகதிவக்கிர நிவர்த்தியாகிறார். சகாய ஸ்தானாதிபதி வக்கிர நிவர்த்தியாவதால் அனைத்து வழிகளிலும் நன்மைகள் கிடைக்கும். குறிப்பாக சகோதரர்களால் அனுகூலம் உண்டு. பயணங்கள் பலன் தரும். சம்பள உயர்வுடன் கூடிய உத்தியோகம் வாய்க்கும். சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**

புரட்டாசி 17 ஆம் திகதி, விருச்சிக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது, பெண் பிள்ளைகளுக்கான சுபச் சடங்குகள் இல்லத்தில் நடைபெறும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றிகிடைக்கும். அடகுவைத்த நகைகளை மீட்பீர்கள். என்றைக்கோ வாங்கிப்போட்ட இடம், பலமடங்கு விலை உயர்ந்து உங்கள் பணத்தேவையைப் பூர்த்தி செய்யும். வழக்குகள் சாதகமாகும்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு பகவானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் குரு பார்வை இருப்பதால் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். கொடுக்கல் -வாங்கல் ஒழுங்காகும். மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும் வேலை கிடைத்து மாத வருமானம் உயரும். கணவன் - மனைவிகள் இருந்த பிணக்குகள் அகலும். பிள்ளைகளின் கல்யாண முயற்சி கைகூடும். சொத்து விற்பனையால் லாபம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கும்.

(தொடரும்...)

# அரசியல் அழுத்தம் காரணமாக
## பதவி விலகுகிறார் துஷான் குணவர்த்தன

(கொழும்பு)
நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் துஷான் குணவர்தன தனது பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனது இராஜினாமா கடிதத்தை இந்த வாரம் துஷான் குணவர்தன, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்னவிடம் ஒப்படைப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர் அரசியல் அழுத்தங்கள் காரணமாக தன்னால் தனது கடமைகளை சுயாதீனமாக செய்ய இயலாத நிலை காணப்படுவதனால் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக துஷான் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு வெள்ளை பூண்டு கொள்கலன்கள் சட்டவிரோதமாக வெளியேற்றப்பட்டமை உட்பட பல சம்பவங்களின் பின்னணியில் தனக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.(நி-5)

# சிறைச்சாலைகளில் நடந்த அடாவடி
## பகிரங்கமாக மன்னிப்புக் கோரிய நீதி அமைச்சர்



(கொழும்பு)
எனது அமைச்சின் கீழ் வருகின்ற இராஜாங்க அமைச்சர் ஒருவர் இவ்வாறு செயற்பட்டுள்ளமை என்னையும் அசௌகரியத்துக்கு உட்படுத்தியுள்ளது என நீதி அமைச்சர் அலி சப்ரி கவலை வெளியிட்டுள்ளார்.

அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்காக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோருகின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்விரு சிறைச்சாலைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவத்தையடுத்து ஜனாதிபதியை தொடர்புகொண்டு லொகான் ரத்வத்தவை சிறைச்சாலைகள் அமைச்சு பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றிருக்ககூடாது எனவும் அவற்றை அனுமதிக்கவும் முடியாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# இலங்கை உட்பட ஆறு நாடுகளுக்கு
## ஜப்பான் அனுமதி

(கொழும்பு)
ஜப்பான் இன்று முதல் இலங்கை உட்பட ஆறு நாடுகளைச் சேர்ந்த பயணிகளின் உள் நுழைவுக்கு அனுமதி வழங்கியுள்ளதாக ஜப்பான் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய ஆறு நாடுகளும் தடுப்பூசி போடப்பட்டவர்கள் மற்றும் ஜப்பானில் செல்லுபடியாகும் குடியிருப்பு அந்தஸ்து உள்ளவர்கள் உட்பட வெளிநாட்டினரின் மொத்த நுழைவுத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு தொடக்கத்தில் கொவிட்-19 பரவலின் அதிகரிப்பினால் ஜப்பானின் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக நுழைவு தடை விதிக்கப்பட்டது.

ஜூன் மாதம் மேற்கண்ட நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த தடை உத்தரவு, ஆறு நாடுகளுக்கும் இன்று நீக்கப்படும் ஜப்பான் அரசாங்கம் அறிவித்துள்ளது. (நி-5)

# 120,000 ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள்
## நாட்டை வந்தடைந்தன




(கொழும்பு)
120,000 ஸ்புட்னிக் V தடுப்பூசிகள் நேற்று அதிகாலை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

குறித்த தடுப்பூசிகளை கண்டி மாவட்ட மக்களுக்கு இரண்டாம் தடுப்பூசியாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

குறித்த தடுப்பூசிகளை செலுத்தும் பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப் படவுள்ளன. (நி-5)

### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் மாதிரிகள்
# வெளிநாட்டு ஆய்வு
## கூடங்களுக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)
எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பாதிப்பினால் உயிரிழந்ததாக சந்தேகிக்கப்படும் கடல்வாழ் உயிரினங்களின் மாதிரிகள், வெளிநாட்டு இரசாயன ஆய்வு கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கரையொதுங்கிய கொள்கலன்களிலிருந்த பிளாஸ்டிக் மாதிரிகள், பிரித்தானியாவின் லண்டன் நகரிலுள்ள இரசாயன ஆய்வுகூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சமுத்திரசூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தர்ஷினி லஹந்தபுர தெரிவித்துள்ளார்.(நி-5)

# இன்று ஒரு தகவல்
### தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இல்லாத ஒன்று!

இருட்டு நேரம்.ஒருத்தன் ஓடிப்போய் விளக்கைக் கொளுத்திக் கொண்டு வந்தான்.என்ன செய்கின்றாய்? என்று கேட்டார் ஒருத்தர்.இருட்டை விரட்டிக் கொண்டிருக்கின்றேன் என்றான் அவன். இல்லாத ஒன்றை எப்படி விரட்ட முடியும்? என்றார் அவர்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன சொல்கின்றீர்கள்.. இருட்டு என்பது இல்லாத ஒன்றா? என்று கேட்டான். இப்பொழுது அவர் விளக்கம் கொடுத்தார்.

இருட்டு என்று ஒன்று தனியாக இல்லை. வெளிச்சம் இல்லாத நிலை தான் அது... ஒரு இடத்தில் வெளிச்சமாக இருந்தால் வெளிச்சமாக இருக்கு என்கின்றோம். அந்த இடத்திலே வெளிச்சம் இல்லை என்றால் இருட்டு என்கின்றோம்.

ஆக..அந்த இடத்தில் இருப்பதும் இல்லாமல் போவதும் வெளிச்சம் தான். இருட்டு என்று ஒன்று தனியாக ஓடிவந்து உட்கார்ந்து கொள்வது இல்லை.

நாம் தான் விளையாட்டுத் தனமாக நினைக்கின்றோம்.. இருட்டு என்று ஒன்று ஏற்கனவே இருப்பதாகவும் வெளிச்சத்தைக் கண்டவுடனே அது எழுந்திருச்சு ஓடிப் போவதாகவும் என்று நினைத்துக் கொள்கின்றோம். இதிலே இருட்டை விரட்டுகிறேன் என்று வீர வசனம் வேறு. வெளிச்சம் இல்லாமை தான் இருட்டு என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எங்கள் மனதுக்குள்ளே பயம் என்று சொல்கின்றோம். பாருங்க. அது கூட இருட்டு மாதிரித்தானாம் ஞானிகள் சொல்கின்றார்கள். வெளிச்சம் இல்லாமல் இருட்டு என்கின்றோம் அல்லவா.. அது மாதிரி அன்பு இல்லாமை தான் பயம் என்கின்றார்கள் அவர்கள்.

அன்பு இல்லாத ஒரு நிலை தான் பயம். அன்பு என்பது விளக்கை அங்கே ஏற்றி வைத்துவிட்டால்... பயம் என்கின்ற இருட்டு அங்கே இருக்காது.

சூஃபி இலக்கியத்திலே ஒரு சம்பவம் வரும். முல்லா நஸ்ருதீனுக்கு காலையில் கல்யாணம்.

அன்றைக்கு மாலையிலே அவரும் அவருடைய இளம் மனைவியும் உறவினர்களுடன் ஆற்றைக் கடந்து போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

திடீர் என்று புயல்... வெள்ளம்..படகு இப்படியும் அப்படியும் ஆட ஆரம்பித்து விட்டது. எல்லோருக்கும் பயம்..முல்லா மட்டும் பயமில்லாமல் அவர் பாட்டுக்கு இருந்தார்.ஏங்க உங்களுக்கு பயமாக இல்லையா? என்று கேட்டார் அவர் மனைவி மிகவும் ஆச்சரியமாக.

இதற்கு முல்லா நஸ்ருதீன் பதில் சொல்லவில்லை.. இடுப்பிலே இருந்த ஒரு கத்தியை எடுத்தார்.மனைவியின் கழுத்திற்கு நேராக நீட்டினார் குத்தப் போவது போல் ஓங்கினார். அந்த அம்மா முகத்தில் எந்தவிதச் சலனமுமில்லை.

இப்பொழுது முல்லா கேட்டார் கத்தி என்றால் உனக்குப் பயமா இல்லையா? என்றார்.இதற்கு அவர்கள்...கத்தி என்றால் அபாயகரமானதாக இருக்கலாம். ஆனால் அதைப் பிடித்திருக்கின்றவர் என்னில் அளவு கடந்த அன்பு வைத்திருக்கின்ற என் கணவர்.. அதனால் நான் பயப்படவில்லை என்றார். இப்பொழுது முல்லா சொன்னார்.அதே மாதிரி தான் எனக்கும்.. இந்த அலைகள் என்றால் ஆபத்தானதாக இருக்கலாம். ஆனால் இதை ஆட்டுவித்துக் கொண்டிருக்கின்ற அல்லாஹ் அன்பு மயமானவர். அதனால் எனக்குப் பயம் இல்லை என்றார்.அவருக்கு நம்பிக்கை இருந்தது. அதனால் அன்பு இருந்தது. நம்பிக்கை இல்லை என்றால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லை என்றால் பயம் வந்திருக்கும். படகிலே இருந்த ஏனையவர்கள் மாதிரி அவரும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்திருப்பார். இந்த உண்மையை எங்கள் வாழ்க்கையிலேயும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

நமக்குப் பயம் ஏற்படுகின்றது என்றால் என்ன அர்த்தம்? எங்கள் மேலேயே நமக்கு நம்பிக்கையில்லை என்று அர்த்தம். நான் கடவுளுக்குப் பயந்தவன் என்று சொல்கின்றார்கள் பாருங்கள். அது மிகவும் அபத்தமானது என்கின்றார்கள் பெரியவர்கள் எல்லாம். (சுவாமி சுக போதானந்தா). அங்கே செலுத்த வேண்டியது அன்பே தவிர பயம் இல்லை. எங்கள் உபநிஷத்துக்கள் சொல்கின்ற மிகப் பெரிய விடயமே பயம் இல்லாமல் இரு என்பது தான் என்கின்றார் சுவாமி விவேகானந்தர்.

பயப்படுகின்றவர்களுக்கெல்லாம் பெரியவர்கள் சொல்கின்ற அறிவுரை என்ன தெரியுமா?எதிர் காலத்தைப் பற்றித் திட்டமிடுங்கள். தவறில்லை.. ஆனால் எதிர் காலத்தில் என்ன நடக்கும் என்கின்ற கற்பனைகளில் பயந்து கொண்டிருந்தீர்கள் என்றால் உங்கள் மகிழ்ச்சி தான் பாழாகும்.

ஒருத்தர் டாக்டரிடம் வந்தார்.டாக்டர் பதினைந்து வருடத்திற்கு முன்னால் ஒரு தடவை உங்களிடம் வைத்தியத்திற்கு வந்தேன்.. காலிலே அடிபட்டு வந்தேன்.. காலிலே கட்டுப் போட்டு தண்ணி படாமல் பார்த்துக் கொள்ளவும் என்றார். அதனால் இப்பொழுது என்ன? என்றார் இவர். இனிமேல் நான் குளிக்கலாமா? என்று கேட்பதற்காக வந்தேன் டாக்டர் என்றார் அவர்.




# மொட்டைத்தலை

"வைத்தியரே, உங்களை அழைத்து வரும்படி காவலர்களை அனுப்புவதற்கு முன், அரண்மனை குருநாதரிடம் ஆலோசனை கேட்டேன்.

அவர் பொடுதலை வைத்துக் கட்டினால் முழங்கால் வலி சரியாகப் போய்விடும்என்று கூறினார்.

மேலும்எதற்கும்வைத்தியரிடம்ஒரு வார்த்தை கேட்டுவிடுங்கள்என்று குருநாதர்சொல்லிவிட்டுச்சென்று விட்டார். அதன் பிறகுதான் உங்களுக்கு ஆள் அனுப்பினேன்.

நீங்கள் வருவதற்குச் சற்று தாமதம்ஆனதால் என்ன செய்வதென்று யோசனை செய்தேன்," என்று கூறி அரசன் தன் பேச்சைப் பாதியில்நிறுத்தினான்.

"அப்புறம்என்ன நடந்தது அரசே?" என்று கேட்டார்வைத்தியர்.

"அப்புறம்... அங்கிருந்த அரைகுறைப் பண்டிதனிடம், "பொடு தலை" என்றால் என்ன என்று கேட்டேன்.

அதற்கு அவர் தனது கையில் இருந்த அகராதியைப் பார்த்து, அரசே, பொடுதலை என்றால் முடியில்லாத தலை என்று அர்த்தம் எனக் கூறினான்.

அவன் கூறியபடியே ஒரு மொட்டைத்தலையனைக் கண்டுபிடித்து அவனது தலையை வெட்டி அதனை எனது முழங்காலில் கட்டினால் முழங்கால் வலி



போய்விடும் என்று எண்ணிஇவ்வாறு செய்தேன்," என்று விளக்கமாகக் கூறினான் அரசன்.

அரசன் இவ்வாறு கூறியதைக் கேட்ட வைத்தியர் கலகல வெனச்சிரித்தார். "வைத்தியரே, ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார் அரசன்.

"அரசே! பொடுதலை என்றால் ஒரு சக்திவாய்ந்த மூலிகைஇலை. அதை நசுக்கி முழங்காலில் வைத்துக் கட்டினால் வலிநீங்கிவிடும்," என்று கூறினார்வைத்தியர்.

இதைக் கேட்ட அரசன் பேந்தப் பேந்த விழித்தான். ஆனால், மொட்டைத் தலையனோ வைத்தியரைப் பார்த்து, "ஐயா, சரியான நேரத்தில் வந்து என் உயிரை காப்பாற்றினீர்கள்.

நீங்கள் மட்டும் வரவில்லை என்றால், இந்நேரம்என்தலையை வெட்டி, நசுக்கி அரசனின் முழங்காலில் வைத்துக் கட்டியிருப்பார்கள்.

நல்லவேளை, என் உயிர்தப்பியது"என்று கூறிவிட்டு அங்கிருந்து ஓட்டம்பிடித்தான்.

அதிலிருந்துதான், "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடாதே" என்ற பழமொழி உருவானது. (முற்றும்)

# மகாபாரதம்




எங்கே போகிறேன் தெரியுமா? உன்னிடம் ஏவல் புரிந்த அந்தணனிடம்" என்று கூறி மறைந்து இந்திரனிடம் சென்றது.

பிரகலாதன் மேனியிலிருந்து மீண்டும் ஒரு ஒளி.."நீ யார்" என்றான்."நான் தருமம்.. சீலம் எங்கு இருக்கிறதோ அங்கு நான் இருப்பேன்.

ஆகவே நானும் அந்த அந்தணனை நாடிச் செல்கிறேன்" என உரைத்துப்போனது.

பிரகலாதன் உடலிலிருந்து மீண்டும் ஒரு ஒளி..இம்முறை சத்தியம். எங்கே தருமம் உள்ளதோ...அங்கே நான் இருப்பேன்என தருமத்தைத் தொடர்ந்தது.

மீண்டும் ஒரு ஒளி.. அது "பலம்" சத்தியம் இருக்குமிடத்தில்தான் நானும் இருப்பேன் எனக் கூறி சத்தியத்தை பலம் பின் தொடர்ந்தது.

பின்பிரகலாதன்மேனியிலிருந்து ஒரு தெய்வ மகள் தோன்றினாள்.நீ யார் என்றான் பிரகலாதன்.

அதற்கு அந்த மகள் "நான் லட்சுமி எங்கே பலம் இருக்கிறதோ அங்கு நான் இருப்பேன். இப்போது உன்னிடம் பலம் நீங்கிச் சென்றுவிட்டது.

எனவே நான் அந்தப் பலத்தை நாடிச்செல்கிறேன். நான்நாடிச்செல்லும் பலம் அந்தணனிடம் உள்ளது" என்றாள். "யார் அந்த அந்தணன்" என்றான் பிரகலாதன்.

"அவன் தேவேந்திரன். அந்தண வேடம் தாங்கி உனக்குப் பணி புரிந்தான். நீ சீலம் என்னும் நல்லொழுக்கத்தால் மூவுலகை ஆண்டாய்.

இதனை உணர்ந்து அவன் உன்னிடம் இருந்த சீலத்தை யாசித்துச் சென்றான்.

சீலம் உன்னைவிட்டு பிரிந்து சென்றபின் அதனைத் தொடர்ந்து தருமம்,சத்தியம்,பலம் ஆகியவை உன்னை விட்டு நீங்கின. இறுதியாக நானும் செல்கிறேன்" என்றுகூறிவிட்டு லட்சுமி மறைந்தாள்.

ஆகவே துரியோதனா, சீலம் உள்ள இடத்தில் தான் எல்லா நன்மைகளும் தங்கி இருக்கும் என்பதை உணர்" என திருதராஷ்டிரன் தன் மகனை நோக்கிக் கூறினார்.

(தொடரும்)

குறை யாருடையதாக இருந்தாலும் பொறுப்பு நம்முடையது!
~ ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரீட்சைகளைப் பிற்போடுவது மாணவர்களைப் பாதிக்கும்

பாடசாலைக் காலம் என்பது இறைவனால் தரப்பட்ட கொடை எனலாம்.

எனினும் சமகாலத்துக் கொரோனாத் தொற்றுக் காரணமாகப் பாடசாலைகள் இயங்க முடியாத சூழ்நிலையில், பாடசாலைக் காலம் இழக்கப்படுவது துரதிர்ஷ்டவசமானது.

அதிலும் குறிப்பாகத் தரம் 5 இலும் க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர் என்பதையும் கூறித்தானாக வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக இழந்த கல்வியை ஈடுசெய்யும் வகையில் Zoom மூலமான கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இக்கற்றல் செயற்பாடுகள் எல்லா மாணவர்களையும் சென்றடையவில்லையாயினும் Zoom கற்றல் செயற்பாடு நடைபெற்றதால், அதில் பங்கேற்க முடியாத மாணவர்களையும் கற்றல் செயற்பாட்டுக்குள் ஈடுபடுத்தும் வகையில் பல்வேறு செயற்பாடுகளை ஆசிரியர்கள் முன்னெடுத்தனர்.

இருந்தும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுவரும் தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக Zoom வகுப்புகளும் தடைப்பட்டுப் போயின.

பாடசாலைக் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட வேண்டிய மாணவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் இல்லாதபோது, இருக்கக்கூடிய மாற்று வழிமுறைகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட கற்றல் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டமை கவலைக்குரிய விடயமாகும்.

அதாவது அதிபர், ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இதுபற்றி ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பல தடவைகள் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தன.

எனினும் அவற்றையெல்லாம் தட்டிக்கழிப்பதாகவே ஆட்சியாளர்களின் போக்கு அமைந்தது.

ஆயினும் இந்த நேரத்தில் Zoom கற்றல் உள்ளிட்ட செயற்பாடுகளை ஆசிரியர்கள் நிறுத்திக் கொண்டமை தர்மமன்று என்பது தான் பொதுவான கருத்து.

ஆகையால், இது தொடர்பில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மறு பரிசீலனை செய்து, மாணவர்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவையொருபுறமிருக்க, கொரோனாத் தொற்றைக் காரணமாகக் கொண்டு பரீட்சைகளைப் பிற்போடுவது மாணவர்களைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதால், ஏதோவொரு வகையில் பொதுப்பரீட்சைகளை நடத்தி, மாணவர்களின் சுமைகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனின் மரணத்தில் சந்தேகம்

## விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் அலுவலகம் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை

(யாழ்ப்பாணம்)

கடந்த 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் உயிரிழந்தமை தொடர்பாக முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்குப் பிரதமர் அலுவலகம் பணிப்புரை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவனான வடமராட்சி துன்னாலை வடக்கைச் சேர்ந்த சிதம்பரநாதன் இளங்குன்றன் என்பவர் கடந்த 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று அவர் தங்கியிருந்து கல்வி கற்று வந்த கோண்டாவில் கிழக்கு வன்னியசிங்கம் வீதியிலுள்ள வீட்டிலிருந்து மர்மமான முறையில் தூக்கில் தொங்கவிடப்பட்டிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

குறித்த மரணத்தை தற்கொலை எனும் அடிப்படையில் முடிவெடுத்து விசாரணைகளைப் பொலிஸார் கிடப்பில் போட்டிருந்தனர்.

சம்பவத்தில் குறித்த மாணவன் உயிரிழந்தமை தொடர்பில் தெரியவருவதற்கு சுமார் இரண்டரை மணித்தியாலங்களுக்கு முன்பாகவே அவர் மரணமடைந்தமை தொடர்பான தகவல் வெளியாகியிருந்தது.

இதுதொடர்பில் பொலிஸாருக்குச் சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஞா-18,33,60)

## புலமைப்பரிசில், சா/த, உ/த பரீட்சைகள்

# ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட திகதிகளிலே இடம்பெறும்

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சை ஆகியவற்றை நடத்துவதற்கு ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட தினங்களில் இதுவரையில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை.

இது குறித்த கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படவில்லை என்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகம் பிரணவதாசன் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பரில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள பரீட்சைகள் தொடர்பில் வினவியபோது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், பரீட்சைகளை நடத்துவதற்கு ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட திகதிகளில் இதுவரையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளை நடத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டு வருகிறது. எனினும் கல்வி அமைச்சு மட்டத்திலான தீர்மானத்தின் பின்னரே இது குறித்து அறிவிக்கப்படும் என்றார்.

இதன்படி தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை 2021 நவம்பர் 14 ஆம் திகதியும் க.பொ.த உயர்தரப் பரீட்சை 2021 நவம்பர் 15 முதல் டிசம்பர் 10 வரையும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை 2022 பெப்ரவரி 21 முதல் மார்ச் 3 வரையும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

### மருத்துவக் குறிப்பு

தினமும் காலையில் ஓர் அவுன்ஸ் துளசிச்சாறு குடிக்க இரத்தக்குழாய் அடைப்பு, இரத்த அழுத்த நோய் விலகும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இயற்கைக்கும் அறிவிற்கும் உள்ள உறவு



ஒடுங்கியும், விரிந்தும், பொருளாகவும், கருத்தாகவும், நன்மையாகவும், தீமையாகவும், இன்பமாகவும், துன்பமாகவும் இயங்கும் அறிவை உடைய மனிதன் எந்த அளவுக்கு, எவ்வளவு ஆழ்ந்து இயற்கையை, அதன் உண்மைகளை, இரகசியங்களை உணர்ந்து கொள்ளுகின்றானோ அந்த அளவிற்கே அவன் வாழ்வில் வெற்றியும், மகிழ்ச்சியும், நிறைவும், அமைதியும் பெறுகிறான். இயற்கையை, அதன் விரிவான இயக்க ஆற்றல்களை, மனிதன் அறியாமலோ, அல்லது அறிந்தும் மறந்தோ, புலனளவில் குறுகி இயங்கும்போது அறிவு, காலம், தூரம், வேகம், பருமன் என்ற பரிணாமங்களால் கருத்தாகவும், வடிவமாகவும் மாற்றம் பெற்று உயர்வு தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகின்றது.

இந்த நிலையில் அறிவுக்குத் தன்முனைப்பு (Ego) எனும் சிறுமை நிலை உண்டாகின்றது. இந்த சிறுமை நிலையில், மயக்கம், உணர்ச்சி, பயம், மிரட்சி, விளைவறியாச் செயல்கள், சிக்கல், கவலை இவை தோன்றிப் பெருகித் துன்பமடைகின்றது. இயற்கையோடு விரிந்தும், ஆழ்ந்தும், அதன் பெருமையோடு ஒன்றும்போது விளக்கம், விழிப்பு, அன்பு, கருணை, நிறைவு, அமைதி, மகிழ்ச்சி இவை பெற்று அமைதி பெறுகிறது. இங்கு 'தன்முனைப்பு' என்ற திரை விலகி இயற்கை என்ற அருட்பேராற்றலோடு இணைந்து மனிதன் பேரின்பமடைகிறான்.

எனவே, இயற்கையோடு ஒன்றி, உணர்ந்து, தெளிந்து விழிப்புடன் வாழ்வதே ஆறாவது அறிவைப் பெற்ற மனிதனின் பிறவி நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கு ஒப்ப வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற உள்ளுணர்வே தெய்வ வழிபாடாக உருவாகியது.

# மரண அறிவித்தல்

மண்ணுலகம்
24
-
04
-
1933



விண்ணுலகம்
19
-
09
-
2021

## திருமதி பூரணம் செல்லத்துரை

### (ஓய்வுபெற்ற ஆசிரியை)

சுதுமலை கிழக்கு மலைவேம்படி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் செல்லத்துரை நேற்று (19.09.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா செல்லத்துரையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுப்பையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பையா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பாலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சின்னாச்சிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வக்குமார் (சுங்க அதிகாரி, சுங்கத் திணைக்களம், கொழும்பு), இராஜகுமாரி (கொழும்பு), செல்வானந்தம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நகர சபை, வல்வெட்டித்துறை), செல்வகுணபாலன் (சட்டவரையுநர் - சட்டவரையுநர் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் கேதாரணி (ஆசிரியை - சைவமங்கையர் கல்லூரி, கொழும்பு), வினாசிராஜன் (கணக்காளர், மாலைதீவு), கலைச்செல்வி (ஆசிரியை - வல்வை மகளிர் கல்லூரி), சாருமதி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச சபை, காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்துஷான் (பொறியியல் பீடம், British Columbia University), பிரதாயினி (பொறியியல் பீடம், British Columbia University - கனடா), விலக்ஷன் (பேராதனைப் பல்கலைக்கழகம், பொறியியல் பீடம்), விருட்ஷான் (மொறட்டுவ பல்கலைக்கழகம், பொறியியல் பீடம், கொழும்பு), செந்துஜி (மாணவி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.09.2021) திங்கட்கிழமை மு.ப 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை கிழக்கு,
மலைவேம்படி ஒழுங்கை, மானிப்பாய்.

(7938)

தகவல்:-
குடும்பத்தினர் (077 634 1226)

## நீர்வேலியில்...

உள்ள ஞானவைரவர் ஆலயத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இ.டிலக்சன் (வயது-26) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் வீடு நோக்கி சென்று கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்த தன் காரணமாக வீதியோரமாக இருந்த சீமெந்து கட்டுடன் மோதி விபத்து நிகழ்ந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சீமெந்து கட்டில் காணப்பட்ட இரும்புக் கம்பிஅவரது நெஞ்சுப் பகுதியில் குத்தியமையால் படுகாயமடைந்த இளைஞன் நோயாளர் காவுவண்டி மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா-33)

## 103...

துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் 56 ஆண்களும் 47 பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த ஆண்களில் 44 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். 11 பேர் 30 முதல் 59 வயதுக்குட்பட்டவர்கள். ஒருவர் 30 வயதிற்குட்பட்டவர். (ஞா)

## யாழ்.சிறைச்...

யுள்ளது என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ். சிறைச்சாலையைச் சேர்ந்த 34 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

39 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 05 பேருக்கு மாத்திரமே தொற்று இல்லை என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர் 22 வயதுடைய பெண் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களிடம் இருந்து கடந்த 16ஆம் திகதி பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டுள்ளமை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நான்கு நாட்களுக்குள் ஏனையவர்களுக்கும் பரவல் ஏற்பட்டிருக்கும் அபாயம் காணப்படுவதாக சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஞா)

## மதுசாலையை...

தெரிவித்துள்ளார்.

நேற்று எப்பாவள பிராந்திய மருத்துவமனைக்கு பயணம் செய்தபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இராஜாங்க அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

"கோவிட்-19 தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்த தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை விதிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் இப்போது முறையாக அடையப்பட்டு வருகின்றன.

எனவே ஒக்ரோபர் முதலாம் திகதிக்குப் பின்னர் ஊரடங்கு உத்தரவு இந்த வழியில் தொடருவது மிகவும் சாத்தியமில்லை என்றார். (ஞா)

## மன்னாரில்...

ஸனின் மரணம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நால்வரும் வருகின்ற வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கள்ளியடிப் பகுதியில் வசித்துவந்த வவுனியாவைச் சேர்ந்த நாகேந்திரன் டிலக்ஸன் (வயது - 14) என்ற மாணவன் கடந்த வெள்ளிக்கிழமை அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட இலுப்பைக்கடவை பொலிஸார் குறித்த மரணம் தொடர்பாக கள்ளியடிப் பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய மூன்று சிறுவர்கள் மற்றும் 22 வயது நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்திய நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைவரை குறித்த நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டுள்ளார். (ஞா-285)

## 1,733...

உறுதியான மேலும் 1,733 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 504,491 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,002 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 432,038 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## கணவனை...

பெற்றுள்ளது.

சம்பவத்தில் துரைராசா செல்வராசா (வயது-32) என்ற ஒரு பிள்ளையின் தந்தை உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த அவர், திருமணம் முடித்து பூம்புகாரில் வசித்து வருகிறார்.

மேசன் தொழிலில் ஈடுபடும் குடும்பத் தலைவருக்கு மனைவியுடன் சில நாட்கள் நீடித்த குடும்ப முரண்பாடு முற்றிய நிலையில் நேற்று முன்தினமிரவு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். உடனடியாக குடும்பப் பெண் கைது செய்யப்பட்டார்.

திருகுவளைக் கட்டையால் கடுமையாகத் தாக்கப்பட்ட குடும்பத் தலைவரின் உடலில் 5இற்கு மேற்பட்ட காயங்கள் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவரின் மனைவியிடம் பொலிஸார் தொடர் விசாரணைகளை முன்னெடுத்துவரும் நிலையில் அவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் மனைவியுடன் அவருக்கு இருந்த தொடர்பு தொடர்பில் எழுந்த பிரச்சினைதான் குடும்பத் தலைவரைக் கொலை செய்யும் முடிவுக்கு கொண்டு சென்றுள்ளது என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இருவரும் இணைந்தே குடும்பத் தலைவரைக் கொலை செய்துள்ளனர் என்றும் ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை முன்னதாக கொல்லப்பட்டவரின் மனைவி பொலிஸாருக்கு தெரிவிக்கையில், "கணவன் தினமும் போதையில் வந்து தன்னுடன் தர்க்கப்பட்டு, தன்னைத் தாக்குவதாகவும் அன்றைய தினமும் வழமைபோன்று இரவு போதையில் வந்து தர்க்கப்பட்டு தன்னை தாக்கியபோது, தான் ஆத்திரத்தில் கையில் அகப்பட்ட திருகுவளையால் திருப்பி தாக்கியபோது, அவர் உயிரிழந்துவிட்டார்" என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸாரின் விசாரணைகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் ஏ.பீற்றர் போல் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ வல்லுநர் முன்னிலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நீதவான் உத்தரவிட்டார்.

கொல்லப்பட்டவரின் மனைவியான 28 வயதுடைய பெண்ணையும் அவருடன் தொடர்பை வைத்திருந்த 28 வயதுடைய ஆணையும் யாழ்ப்பாணம் குற்றப் பிரிவு பொலிஸார் தடுத்து வைத்து தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா-18,33,60,101)

## மக்களின் செயற்...

ஒன்று துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டமாகும்.

நாட்டில் சகல பகுதிகளிலும் மக்களுக்கு தட்டுப்பாடு இன்றி தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. 50 வீதமான மக்களுக்கு இவ்வாறு இரண்டு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

அதேபோல் இரண்டாவது சாதகமான விடயம் என்னவெனில், நாடு தொடர்ச்சியாக ஆறு வார காலம் முடக்கப்பட்டுள்ளமை புதிய வைரஸ் பரவல் ஏற்படாது தடுக்கக் காரணமாக அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ஞா)

## வட்டுக்கோட்டை...

நடத்தியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வன்முறைக் கும்பல் ஒன்று, நேற்று இரவு 7 மணியளவில் முதலியார் கோவில் பகுதிக்குள் உள்நுழைந்து அங்கு தாக்குதல் நடத்தியுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார். அத்துடன் வேலிகளின் தகரங்கள் அடித்து பிடுங்கப்பட்டு வீடு ஒன்றின் கதவினையும் குறித்த வன்முறைக் கும்பல் அடித்து உடைத்துள்ளதுடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் சேதப்படுத்தியுள்ளது.

வாள்வெட்டிற்கு இலக்கான குடும்பஸ்தர் 1990 என்ற அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் தகவலறிந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் குறித்த பகுதிக்குச் சென்று தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரைக் கைது செய்துள்ளதுடன் 7 மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர். (ஞா-107)

## யாழில் இரு...

லுள்ள வீடொன்றிலும் இரண்டு பிறந்தநாள் நிகழ்வுகள் நடப்பதாக பொலிஸாருக்கு பொதுமக்கள் தகவல் வழங்கியுள்ளனர்.

இதையடுத்து அங்கு சென்ற பொலிஸார், இரண்டு பிறந்தநாள் நிகழ்வுகளிலும் கலந்து கொண்ட சுமார் 35 வரையான இளைஞர்களை கைது செய்து, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். (ஞா-33)

## வடக்கில் 80...

இரண்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கர்ப்பவதி ஒருவர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 80 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 56 பேர் யாழ்.மாவட்டத்தில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 294 பேருக்கு பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அவற்றின் அடிப்படையில்,

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 56**

சிறைச்சாலையில் 34 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் 12 பேர், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 02 பேர், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர் (10ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள கர்ப்பவதி) சென்றல் நேர்சிங் ஹோமில் ஒருவர்.

**வவுனியா மாவட்டத்தில் 14 பேர்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர், செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் ஒருவர்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 03 பேர்**

**கிளிநொச்சி மாவட்டத்தில் 04 பேர்**

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 03 பேர், (ஒருவர் ஒரு வயது நிரம்பிய பெண் குழந்தை) எனத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். (ஞா-18,33)

## யாழ்.- 02...

வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்று வந்த 48 வயதான நபர் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மந்துவில் பகுதியைச் சேர்ந்த 48 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நேர்ந்த குறித்த கோவிட் மரணம் வைத்தியசாலையின் 12ஆவது கோவிட் மரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈ-வினை மத்தி பகுதியில் சுகவீனம் காரணமாக வீட்டில் உயிரிழந்த வயோதிபர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

கிளிநொச்சியில் உயிரிழந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 81 வயதுடையவர் என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா-30)

## வேலை வாய்ப்பு

ஊடகத்துறையில்

◆ செய்தி வாசிப்பாளர்

◆ வீடியோ எடிட்டிங் போன்ற

வேலைகளுக்கு பணியாளர்கள் தேவை.

(7908)

தொடர்பு

**076 126 6682**

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு, வீமன்காமம் (டச்சு றோட்)

பகுதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(நில.பர 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன்)

நீர்வேலி தெற்கு, கரந்தன் பகுதியில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(நில.பர 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்

14 அடிப் பாதையுடன்

கரந்தன் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரம்)

**பார்வையிடும் நேரம்:** காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை.

(7932)

**077 814 7389, 077 614 7333**


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 21.08.2021 அன்று
இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் குட்டித்தம்பி சந்திரகாந்தி

[ கார்க்கார சந்திரன்,
பலாலி தெற்கு, வயாவிளான் ]

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (19.09.2021) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.09.2021) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னார் இறைபதமடைந்த துயரச் செய்தியைக் கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் மற்றும் வயாவிளான் பிரான்ஸ் ஒன்றியம், வயாவிளான் சர்வதேச மக்கள் ஒன்றியம், முகப்புத்தகம் மூலமாகவும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(7935)

கோப்பாய் வடக்கு,
பருத்தித்துறை வீதி,
கோப்பாய்.

076 624 9910

குடும்பத்தினர்

## ஆறு வருடங்கள் கடந்த நினைவுகள் | 31ஆம் நாள் நினைவுகள்



பிறப்பு 21.06.1952 — இறப்பு 22.02.2015

அமரர்/ **தங்கராணி நவரத்தினராசா**

திதி : பூர்வபக்க சதுர்த்தி

ஐயிரண்டு திங்கள் தவமிருந்து எமைப்பெற்றவரே ...
எமை அணைத்து ஆதரிப்பார் எவருமின்றி தவிக்கின்றோம்..
எழுந்தோடி வந்திடுங்கள் எங்கள் துயர் தீர்த்திடுங்கள்...

பிறப்பு 03.04.1951 — இறப்பு 21.08.2021

அமரர்/ **பொன்னையா நவரத்தினராசா**

(நவம் ஐயா)

ஆதீனகர்த்தா/பூசகர் - திருவருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம், வண்ணாங்கேணி வடக்கு, பளை.

திதி : ஆவணி பூரணை

(C-2679)

கடந்த 2021.08.21 ஆம் திகதி இறைபதமடைந்த எமது பாசமிகு தந்தையின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு உதவியவர்கள் மற்றும் நாட்டின் தற்போதைய சுகாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு பல வழிகளிலும் உதவியுடன் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வண்ணாங்கேணி வடக்கு,
பளை.

077 606 7728

துயருடன்
பிள்ளைகள்

## ஈரவிழிகளுடன் 31ஆம் நாள் நினைவுகள்



அமரர்

### கந்தக்குட்டி இரத்தினம்

மண்ணில் : 15.09.1943 விண்ணில் : 21.08.2021

பிறப்பு இறப்பு இது இயற்கை
இடையில் வாழ்வதுதான் பெருமை
பெருமைக்குரியவராய் வாழ்ந்தீர்கள்.
ஒரு மனிதன் இருக்கும் போது – சமூகத்திற்காக
என்ன செய்தாய்? என்று கேள்வி எழுப்பினால்
இல்லை எனப் பதில்வரின் பிறப்பில் பலனில்லை.
இக் கேள்வியை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.
பலனிருக்கிறது உங்கள் சாவில்
பெருமையடைகிறோம். அது போதும்.

வந்தீர் – காலப் பணிக்கு
உம்மை ஒப்புக் கொடுத்தீர் – சென்று விட்டீர்.
உந்தன் வாழ்நாள் வாழுமையா...
எந்தன் குலத்திற்கு இப்படியான இழவு இனி வேண்டாம்.
இதுவே சொல்லொணாத்துயர் இனியும் எம் மனம் தாங்காது.
இதற்கு மேல் நாம் என்ன சொல்ல?

உங்கள் சுவடுகளைப் பத்திரப்படுத்தினால் – அது
வளையாத வாழ்விற்கு நிச்சயமாய் வழிகாட்டும்.
இறைவன் சந்திக்க வாய்ப்புத் தந்தாலும்
தேவையில்லையென வைராக்கியத்துடன் மறுக்கும் வல்லமை கொண்ட
எங்கள் பரம்பரையின் தூணையல்லவா இழந்து விட்டோம்.
காலமெல்லாம் நமக்கிருளா? காலமினிக் கைதருமா?
சாலவும் நீங்கள் வேண்டும் – அந்தச் சாவுக்கும் சாவு வேண்டும்.

அண்ணாசிலையடி,
கரணவாய்.

(C-2677)

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.